1.

அமேதியஸ் ஒரு சந்தோஷம் நிறைந்த உயிர்ப்புள்ள சிறுவனாக இருந்தான். அவனை விட ஐந்து வயது பெரியவள் ஆகிய அவனது அக்காவான மரியானாவுடன் ஓடி ஆடி விளையாடினான். பம்பேர்ள் என்னும் அவனது மஞ்சள் நிற நாயுடன் குதித்து ஓடினான். அவன் வீட்டில் சமையல் வேலை செய்து தெரஸாவிடம் குறும்புகள் செய்வான். அவனுக்கு ஓடியாடி விளையாடுவது பிடித்திருந்தது. அவனை யாரேனும் ஒரே இடத்தில் நிற்க செய்தால் தன் பாதங்களை தரையில் தட்டியவாறு கண்களை சிமிட்டிக் கொண்டே இருப்பான்.

2.

அவனுக்கு வார்த்தைகளுடனும் விளையாடுவது பிடித்திருந்தது. சில நேரங்களில் வேடிக்கையாக பேசியவாறு கற்பனை பாடல்களை உருவாக்குவான்.

“காற்றுள்ள வரை தான் பாய்மரக் கப்பல்களினால் திமிங்கலங்களை விட வேகமாக ஓட முடியும்”

2.1

இசைக்கு மட்டுமே அவனை அமைதிப்படுத்தும் சக்தி இருந்தது. அவன் அப்பா, அக்காவிற்கு பியானோ சொல்லிக் கொடுக்கும் போது, இவனும் அருகில் ஒரு ஓரமாக அமர்ந்து அதை உன்னிப்பாக கவனிப்பான். இதைப் பார்த்து அவனின் அம்மா நிம்மதிப் பெருமூச்சு விடுவார்.

3.

திடீரென்று ஒரு நாள் அமேதியஸ், பியானோவின் பலகை மீது ஏறி, அவன் அப்பா மரியானாவிற்கு சொல்லிக்கொடுத்த ஒரு பாடலை எந்த தவறும் இன்றி வாசித்தான். அவன் வாசித்ததில் ஒரு பிழை கூட இல்லை.

இசைக் கலைஞரான அவனின் அப்பா இதை கவனித்தார். அமேதியஸுக்கு இயல்பாகவே இசை ஞானம் இருப்பதை உணர்ந்தார்.

3.1

அன்று முதல் அமேதியஸுக்கு அவன் அப்பா தினமும் பியானோ வயலின் வாசிக்க சொல்லிக்கொடுத்தார். அமேதியஸ் மிகவும் எளிதாக கற்றுக்கொண்டான். விரைவில், அவன் அக்காவை விட நன்றாக வாசிக்கத் தொடங்கினான் அமேதியஸ்.

4.

ஆனால் வெற்றி அவன் தன்மையை மாற்றவில்லை. அவனுக்குள் இருந்த இசை என்பது ஒரு பெரிய பரிசு. அந்த பரிசு உலகில் மற்ற எல்லாவற்றையும் விட அவனுக்கு பெரிதாக இருந்தது.

அமேதியஸின் குடும்பத்திற்கும் இன்னும் சில அறிவார்ந்த மக்களுக்கு மட்டுமே அவனின் திறமை புரிந்தது. பலரும் அவனின் நிகழ்ச்சியில், உணர்வுகளை பார்த்தார்களே தவிர அதிலிருக்கும் கலைத்தன்மையை பார்க்கவில்லை. பெரும்பாலும் அவன் நிகழ்ச்சிகள் இவ்வாறே அறிவிக்கப்பட்டது.

4.1

அதிகப்படியான உற்சாகத்தின் காரணத்தினால், இன்று அமேதியஸ், நீங்கள் ஆச்சரியப்படும் வகையில் ஒரு கூடுதல் பாடலை வாசித்து காட்டுவான்.

இந்த ஆறு வயது சிறுவன், மிகவும் கடினமான பியானோ, வயலின் பாடல்களை உங்களுக்காக வாசித்துக் காட்டுவான். அதுமட்டும் இல்லாமல், பட்டுத் துணியால் மறைக்கப்பட்ட பியானோவை வைத்து சிம்பொனிகளை வாசித்துக் காட்டுவான்.

இது தவிர, பியானோவில் எந்த ஸ்வரம் வாசிக்கப்படுகிறது என்பதையும் தொலைவிலிருந்தே கண்டுபிடிப்பான். இறுதியாக, இருப்பதிலே

கடுமையான ஸ்வரங்களை வைத்து அவனே ஒரு தனி பாடல் ஒன்றை உருவாக்குவான்.

5.

தம்பியின் மீது பாசம் நிறைந்த மரியானா, அவன் வெற்றியை பார்த்து பெருமை அடைந்தாள்.

அமேதியஸின் அம்மாவும் அவ்வாறே. அவன் அவ்வப்போது வாசிக்கும் சின்ன சின்ன பாடல்கள் அவன் அம்மாவுக்கு மிகவும் பிடிக்கும்.

சில நாட்களுக்கு பிறகு, அமேதியஸின் அப்பா, அவனுக்கு இருக்கும் திறமையை எல்லோருக்கும் காட்ட ஆசைப்பட்டார். அன்று முதல் அமேதியஸின் வாழ்க்கை ஒரு கனவு போல மாறியது.

5.1

மற்ற ஏழு வயது சிறுவர்கள் எல்லாம் பள்ளிக்கு போகும்போது அமேதியஸ் மட்டும், அவன் அப்பாவுடன் அக்காவுடன் எல்லா ஐரோப்பிய அரசவைகளுக்கும் பயணம் மேற்கொண்டான். எல்லா அரசர்களும் பேரரசர்களும் அவனை போற்றி பாராட்டினர்.

6.

அந்த நேரத்தில், பெரிய அரசவை குடும்பங்கள் எல்லாம் புதிய புதிய நிகழ்ச்சிகளை தங்கள் மாளிகையில் நடத்தி வந்தனர். ஆகவே வித்தியாசமான நிகழ்ச்சிகளை அவர்கள் எப்போதும் தேடிக்கொண்டே இருந்தனர். அமேதியஸையும் அவன் திறமை பற்றியும் கேள்விப்பட்ட போது, அவனை பார்க்க வேண்டும், அவன் இசையை கேட்க வேண்டும், அவனை பாராட்ட வேண்டும் என்ற ஆசை எல்லாருக்கும் இருந்தது.

6.1

பெரிய நிகழ்வுகளுக்கு அமேதியஸ் ஒரு கோட்டும், பட்டுத் துணியால் ஆன ஷூவும் அணிந்து கொள்வான். இடுப்பில் ஒரு வாலை சொருகி வைத்துக்கொண்டு, பார்ப்பதற்கு ஒரு சிறிய படைவிரனைப் போலவே இருப்பான். மரியானா பெருமையாக அவனுடன் பியானோ வாசிப்பாள்.

சில நேரங்களில் அவன் வாசிக்கும்போது, சிலர் அவர்கள் கண்ணாடியை வைத்து உற்று நோக்கி, அமேதியஸ் உண்மையில் சிறுவன் தானா இல்லை குள்ள மனிதனா என்று உறுதி செய்து கொள்வார்கள். ஒரு முறை இத்தாலி நாட்டு ராஜாவிற்கும் ராணிக்கும் வாசித்துக்காட்டும் போது, அவனின் மோதிரத்தில் மந்திர சக்தி இருப்பதாக நினைத்து அதை கலட்டி வைத்து வாசிக்கக் கூறினார்கள்.

7.

ஆனால் அமேதியஸிற் திறமை மந்திர சக்தியால் அல்ல. அவன் படைவிரனைப் போல உடை அணிந்தாலும் அவன் ஒரு சிறுவன் தான். பேரரசர்களுககும் பேரரசிகளுக்கும் மத்தியில் அவன் பயணித்து, அவர்களின் பாராட்டுக்களையும் பரிசுகளையும் பெற்றான்.

7.1

இவை அனைத்தும் அமேதியஸை ஒரு போதும் கர்வம் அடையச் செய்யவில்லை. அவன் முன்பிருந்த அதே சிறுவனாகத்தான் இன்னும் இருந்தான். நிகழ்ச்சிகளுக்கு பிறகு, மரியானாவையும் பிம்பெர்ளையும் துரத்துவதை போல இளவரசர்களையும் இளவரசிகளையும் துரத்தி விளையாடினான்.

8.

இரவில், அவனே உருவாக்கிய ஒரு கற்பனை பாடல் ஒன்றை அவன் அப்பாவிற்கு பாடி காட்டாமல் அவன் உறங்கமாட்டான். அவன் அதை ‘ ஆர்கானிய பிட்டபேனியா’ என்று அழைத்தான்.

இறுதியில் அவன் அப்பாவின் மூக்கில் ஒரு முத்தமிட்டு உறங்கச் செல்வான்.

8.1

அமேதியஸ் அவனுக்கென ஒரு கற்பனை ராஜ்ஜியத்தை உருவாக்கினான். அதற்கு 'ரக்கன்' என்ற பெயரும் வைத்தான். அதில் அவன் தான் ராஜா. அந்த ராஜ்ஜியத்தின் மக்கள் எல்லோரும் நல்லவர்களாகவும் நல்ல பண்பு உடையவர்களாகவும் இருந்தார்கள். ரக்கன் நாட்டிற்கு ஒரு கற்பனை வரைபடம் வரைந்து, அதில் இருந்த எல்லா மலைகளுக்கும் நதிகளுக்கும் பெயர் சூட்டினான்.

9.

அமேதியஸை பற்றி படிக்கும் மக்களுக்கு அவன் சர்க்கஸ் மனிதர்களை போல மற்றுமொரு வேடிக்கைகாரனாகவே தோன்றினான்.

" சிறிய மொசார்ட் ஒரு வியப்பான சிறுவன், அவ்வளவுதான்", என்றார் ஒரு படித்த விமர்சகர்.

அதிர்ஷ்டவசமாக, இது போன்ற பயணங்களும் நிகழ்வுகளும் அமேதியஸையும் அவன் திறமையையும் வளரவிடாமல் தடுப்பதை புரிந்து கொண்டார் அவன் அப்பா.

9.1

அமேதியஸுக்கும் இந்த பறணங்கள் சலிப்பை தர தொடங்கியது. முன்பிருந்த சிவப்பு நிற கன்னங்களும் உயிர்ப்புடன் தன்மையும் அவனிடம் இல்லை.

அதனால் மீண்டும் அவனை வீட்டிற்கு அழைத்துப் போக முடிவு செய்தார் அவன் அப்பா.

"சிறப்பு, நான் என் 'ரக்கன்' ராஜ்ஜியத்திற்கு திரும்புவேன்",என்றான் அமேதியஸ். எந்த தயக்கமும் இல்லாமல், பாரிஸின் வியன்னாவின்

மாளிகைகளை விட்டு அவன் அக்காவுடன் அப்பாவுடன் வீடு திரும்பினான் அமேதியஸ்.

10.

அவனை மீண்டும் கண்டதில் அவன் குடும்பத்தில் அனைவரும் மகிழ்வடைந்தனர். பிமபெர்ள் சந்தோஷத்தில் உலைத்தது. தெரெஸா அவனுக்கு சுவையான பலகாரங்களை செய்து கொடுத்தாள். அவன் அம்மா அவனை அன்பாக அரவணைத்துக் கொண்டார்.

10.1

வீட்டில் அமேதியஸ் விளையாட மட்டும் செய்யவில்லை. அவன் மனதில் அவன் உண்டாக்கிய எல்லா பாடல்களையும் எழுதத் தொடங்கினான்.

அவனது தந்தை, இப்படி ஒரு கலை உணர்வு உள்ள குழந்தையை தனக்கு தந்ததற்காக கடவுளுக்கு கடமை பட்டிருப்பதாக உணர்ந்தார். அவர் அமேதியஸுக்கு ஒரு பாடதிட்டத்தை தயார் செய்தார். அது மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது.

11.

ஆனால் இளம் அமேதியஸ் கடினமாக உழைத்தான். இசையில் வெவ்வேறு வடிவங்களை அவன் ஆராய்ந்து கற்றான். அவனே சிலவற்றை உருவாக்கி, அதில் பல வெற்றிகளையும் அடைந்தான்.

காலப்போக்கில் அமேதியஸ் உலகில் சிறந்த இசையையும் பாடல்களையும் உருவாக்கி, உல்ப்கேங் அமேதியஸ் மொசார்ட் என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட, தலைசிறந்த ஒரு இசை கலைஞராக வாழ்ந்தான்...